செ. கு. எண்: 060 நாள் :01.03.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 1.3.2016

4.2.2016 அன்று ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், ஆசனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு சிக்குசிவனப்பா;

9.2.2016 அன்று ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், கெட்டவாடி கிராமத்தைச் சேர்ந்த திரு நாகராஜப்பா;

12.2.2016 அன்று நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், தூனேரி கிராமம், நெல்லிமந்துவைச் சேர்ந்த திரு காரிகவுடர் என்வரின் மகன் ஆல்துரை;

18.2.2016 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தோலம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு முருகன் ஆகியோர் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

27.2.2016 அன்று திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், பூம்பாறை கிராமத்தைச் சேர்ந்த திரு முத்துசாமி என்பவரின் மனைவி பத்மா காட்டெருமை தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டுயானை மற்றும் காட்டெருமை தாக்கி உயிரிழந்த இந்த 5 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், இந்தத் துயர சம்பவத்தில் உயிரிழந்த குடும்பத்தினருக்கு வனத்துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**